[பேரவைத் தலைவர்] [1993 ஏப்ரல் 15

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(ஈ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக் குழுவிற்குப் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 227 ஆவது விதியின்கீழ், 1993-94 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

7. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates),

1993 ஏப்ரல் 15] [பேரவைத் தலைவர்]

பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts) பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings) உரிமைக் குழு (Committee on Privilages) ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1993ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 1993ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1993ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

8. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13—4—1993ஆம் நாளன்று கோரிய மானியக் கோரிக்கை எண் 12, தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மீது விவாதம் தொடர்ச்சி. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

முற்பகல் 11-50

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள திருக்கோவில்கள் வழிபாட்டுத் தலங்களாகவும், கட்டிடக் கலை மேம்பாட்டையும், சிற்பக் கலையின் எழிலையும் உணர்த்தும் சரித்திரச் சின்னங்களாகவும், தமிழ்நாட்டின் பண்பாட்டையும், மக்களின் பக்தி சிரத்தையையும் வெளிப்படுத்தும் புனிதத் தலங்களாகவும் விளங்குகின்றன. இதைப் போற்றிப் பாதுகாப்பதும், பழமையான பெருமையையும், மக்களின் பக்தி வழிபாட்டையும், கோவில்களின் சிறப்பு அம்சங்களையும் பாதுகாக்க வேண்டியது இத்துறையினருடைய தலையாய கடமையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையை எடுத்துக் கொண்டிருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். இந்தத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களையும் பண்ண வேண்டியதும் மிகவும் அத்தியாவசியமாக